Price 50 Ps. only

# நற்கருணை வீரன்

இதழ் 54 ஆகஸ்ட் 2007 எண் 8

## VANDE MATHARAM



## நீங்கள் எந்த வகை?

மனிதராகப் பிறந்த நம் இயல்பு என்னவென்றால் ஒன்று சேர்ந்து ஒரு குழுமமாக வாழ்வதுதான். நாம் யாரும் எனக்குத் தேவையில்லை என்று தனித்து வாழ இயலாது. ஒருவரையொருவர் சார்ந்துதான் வாழவேண்டும். இவ்வாறு கூடிவாழும் பண்பு கொண்ட நம்மில் ***ஐந்து வகையான*** மனிதர்களைப் பார்க்கிறோம்.

**முதல் வகை :** ***"நான் உண்டு என் வேலையுண்டு"*** என்னும் மனப்பான்மை கொண்டவர்கள். இவர்கள் 'நான்', 'எனது' என்று மட்டுமே வாழ்பவர்கள். பிறரைப் பற்றியோ அவர்களின் தேவைகளைப் பற்றியோ நினைக்கமாட்டார்கள். இவர்களால் மற்றவர்களுக்கு எந்தத் தீங்கும் இல்லை, எந்தப் பயனும் இல்லை. தாமரை இலை மேல் தண்ணீர் போல யாரோடும் ஒட்டிக் கொள்ளாமல் வாழ்பவர்கள். இவர்களின் வாழ்வு **ஒட்டுண்ணி** போன்றது.

**இரண்டாம் வகை :** ***"நான் மட்டுமே வாழ்வில் முன்னேற வேண்டும், பிறர் எவரும் முன்னேறிவிடக்கூடாது"*** என்னும் மனப்பான்மை கொண்டவர்கள். தூங்கும்போது சத்தம் போட்டு குறட்டைவிடுபவர்கள் போல இவர்கள் வாழ்பவர்கள். பிறரைப் பற்றி எந்த விதமான சிந்தனையும் இல்லாதவர்கள். திருவிழா அல்லது வீட்டில் விசேஷம் என்றால் ஒலிபெருக்கியில் பயங்கரமாக பாட்டுப் போட்டும், வானவேடிக்கையோடு கூச்சலிட்டும் கொண்டாடுவார்கள். சுற்றிலும் உள்ள மாணவர்கள், நோயாளிகள், முதியோர் இவர்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். பொது இடங்களைத் தாங்கள் மட்டுமே இருப்பதுபோல பயன்படுத்தி, மற்றவர்கள் அவற்றைப் பயன்படுத்த முடியாதபடி செய்வார்கள். ஆணவமும், அரக்கத்தனமும் கொண்ட இவர்கள் **காட்டுத் தீ** போல எல்லாரையும் சாம்பலாக்கி தான் மட்டுமே வாழ நினைப்பவர்கள்.

**மூன்றாம் வகை :** ***"நான் கெட்டாலும் பரவாயில்லை, மற்றவர்களும் கெட வேண்டும்"*** என்னும் மனப்பான்மை கொண்டவர்கள். இவர்கள் தாமும் வாழ மாட்டார்கள் மற்றவர்களையும் வாழ விட மாட்டார்கள். நான் தோல்வியடைந்தாலும் பரவாயில்லை நீயும் தோல்வியடைய வேண்டும் என்று நினைப்பவர்கள். இத்தகைய மாணவர்கள் தாங்களும் படிக்க மாட்டார்கள், மற்றவர்களையும் படிக்கவிடமாட்டார்கள். இப்படித் தங்களையும் அழித்து மற்றவர்களையும் அழிப்பவர்களை **மனித வெடிகுண்டு** என்றுதானே அழைக்க வேண்டும்?

**நான்காம் வகை :** ***"நானும் நல்லாயிருக்கணும், மற்றவர்களும் நல்லாயிருக்கணும்"*** என்னும் மனப்பான்மை கொண்டவர்கள். வாழ்வு என்பது குருடன் ஒருவன் ஒரு முடவனைத் தன் தோளில் சுமந்து செல்வது போன்றது என்று இவர்கள் நம்புகிறவர்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் தமக்குள்ளவற்றைப் பகிர்ந்து கொண்டு வாழ்பவர்கள். நீயும் வாழ்வில் உயர வேண்டும், நானும் உயர வேண்டும், நாமெல்லோரும் மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்று நினைப்பவர்கள். **இன்னிசைக் கச்சேரியில்** ஒவ்வொருவரும் தத்தம் இசைக் கருவியை மீட்டினாலும் ஒரே இசைதான் அவர்களின் குறிக்கோள் – இல்லையா?

**ஐந்தாம் வகை :** ***"நான் துன்பப்பட்டாலும் பரவாயில்லை, மற்றவர்கள் எல்லோரும் நலமாக, சிறப்பாக வாழ வேண்டும்"*** என்னும் மனப்பான்மை கொண்டவர்கள். இவர்கள் தமக்கென வாழா பிறர்க்குரியர். இவர்கள்தான் நாட்டிற்கு முதுகெலும்பாய் இருப்பார்கள். இத்தகையோரின் தியாகத்தால்தான் நாம் சுதந்திரம் அடைந்தோம். இது எங்கள் பாரதநாடு என்று இன்று உரிமை கொண்டாடுகிறோம். தன்னையே அழித்து பிறருக்கு வழிகாட்டும் **தீபம்** போன்றவர்கள் இவர்கள். சுதந்திரதின விழா கொண்டாடும் நாம் இத்தகைய மாண்பு கொண்டவர்களை நன்றியோடு நினைப்போம்.

**இந்த ஐவரில் நீங்கள் எந்த வகையைச் சேர்ந்தவர்களாக இருக்க விரும்புகிறீர்கள்?**

## அடுப்பை ஊதுவேன்

சுனிதாவுக்கு கித்தார் கற்றுக் கொள்வதில் கொள்ளை ஆசை. டீச்சர் பெயர்களைக் குறிக்க வந்தபோது அவள் தான் முதல் முதல் தன் பெயரைக் கொடுத்தாள். ஆனால் இன்று அவளுக்கு வகுப்பில் இருக்கவே பிடிக்கவில்லை. "சீ... இது என்ன... ஒரே அறுவையாக இருக்கிறது. இரண்டு வாரம் ஆகியும் என்னால் ஒரு பாட்டுக்கூட போட முடியவில்லையே" என்று பக்கத்தில் இருந்த சரிதாவிடம் சலித்துக் கொண்டாள். சரிதா சுனிதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு பொறுமையாக இருக்கும் படி மௌனமாகச் சுட்டிக் காட்டினாள்.




Courtesy : Desert Wisdom - Yushi Nomura

டீச்சருக்கு சுனிதாவின் கலக்கம் புரிந்துவிட்டது. "கவலைப்படாதே சுனிதா. எதையும் உடனே கற்றுக் கொள்ள முடியாது. எதுவுமே தொடக்கத்தில் கடினமாகத்தான் இருக்கும். பொறுமையோடும், விடாமுயற்சியோடும் தொடர்ந்து செய்தால் முடிவில் அது நமக்கு இனிமை பயக்கும். எகிப்து நாட்டில் அன்னை சின்கிளெட்டிகா என்ற துறவி காட்டில் தவம் செய்து வந்தார். அவரிடம் சேர்ந்து துறவு பூண்ட பலர் பாதியில் சென்றுவிட்டனர். அதைக் கண்ட அன்னை "கடவுள் மேல் பக்தி உடனே வந்துவிடாது. தொடக்கத்தில் கடினமாக இருக்கும், ஆனால் மனஉறுதியோடு நிலைத்திருந்தால் கடவுளின் அருள் வெள்ளமாய்க் கொட்டும். அடுப்பைப் பற்றவைக்கும் போது புகை கண்ணில் பட்டு எவ்வளவு தொல்லையாக உள்ளது. விறகும் உடனே பற்றிக் கொள்வதில்லை. ஆனால் நன்றாக எரியத் தொடங்கிய பின் எவ்விதத் தொல்லையும் இருக்காது." என்று சொல்லி வந்தார்கள். "இப்போது நீ என்ன சொல்கிறாய் சுனிதா?" என்று டீச்சர் கேட்டபோது "மனம் தளராது அடுப்பை ஊதுவேன்" என்றாள்.

## இயேசு உயிர்த்தார்

இயேசு சிலுவையில் தொங்கிய வண்ணம் பகல் மூன்று மணியளவில் உயிர் துறந்தார். அவரது உடலை ஒரு கல்லறையில் அடக்கம் செய்தார்கள். அன்று வெள்ளிக் கிழமை.

மறுநாள் காலையில் யூத மதத் தலைவர்கள் பிலாத்துவிடம் சென்று "நேற்று சிலுவையில் கொல்லப்பட்ட இயேசு ஓர் ஏமாற்றுப் பேர்வழி. 'மூன்றாம் நாள் நான் உயிர்த்தெழுவேன்' என்று சொல்லியிருந்தான். ஒருவேளை அவனுடைய சீடர்கள் அவனது உடலைத் திருடிச் சென்றுவிட்டு 'அவர் உயிர்த்தெழுந்துவிட்டார்' என்று பொய்ப் பிரச்சாரம் செய்யலாம். எனவே அந்தக் கல்லறையைக் கவனமாகக் காவல் புரிய உம் படையினருக்குக் கட்டளையிடும்" என்று கேட்டார்கள். பிலாத்து அவர்கள் கோரிக்கையைப் புறக்கணித்தார். "உங்களிடம் காவல் வீரர்கள் இருக்கிறார்கள். நீங்களே போய் உங்களுக்குத் தெரிந்தபடி



கருத்தாய்க் காவல் செய்யுங்கள்" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டார். அவர்கள் போய்க் கல்லறையை மூடியிருந்த கல்லுக்கு முத்திரையிட்டு, காவல் வீரரைக் கொண்டு கருத்தாய்க் காவல் செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

ஓராயிரம் சூரியன் ஒன்று கூடி வீசும் ஒளிக்கு இருள் காவல் இருப்பதா? பரந்த வானில் சிறகடிக்கும் பருந்தைப் பிடிப்பதற்கு காற்றில் அடித்துச் செல்லப்படும் சருகு முயற்சி செய்வதா? விண்ணிற்கும் மண்ணிற்கும் உருக் கொடுத்து உயிர் வாழ வைக்கும் இறைவனுக்கே காவலா? ஞாயிறு விடியும் முன், பூமி அதிர்ந்தது. கல்லறை ஒளிப்பிழம்பானது. காவலர்கள் செத்தவர்களைப் போல் கிடந்தார்கள். இயேசு ஒப்பற்ற மாட்சியோடு, சாவின்மீது தனிப்பெரும் வெற்றி பெற்று உயிர்த்தெழுந்தார்.

இயேசு மனிதராய்ப் பிறந்து, மனிதரைப் போல் மரித்து, இறைவனாய் உயிர்த்தார். அவருடைய உயிர்ப்பு தீமை என்னும் இருளை வென்றது. உண்மைக்கும், அன்புக்கும், நீதிக்கும் சாவு என்பதே இல்லை என்பதை உலகுக்கு உணர்த்தியது. இயேசுவின் உயிர்ப்பிலே நாம் சக்தி பெறுகிறோம். அந்தச் சக்தியால் நாம் உண்மைக்கும் அன்புக்கும் சாட்சிகளாகத் திகழ்கிறோம். **(தொடரும்)**

# எல்லோரும் வாழ வேண்டும்



அப்போதுதான் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து ஒன்று நகர்ந்து கொண்டிருந்தது. அவசர அவசரமாக அதில் ஏறிய கீதா உட்காருவதற்கு இடமிருக்கிறதா என்று சுற்றுமுற்றும் பார்த்தாள். இடமே இல்லை. ஒரு சீட்டில் மூன்று பெண்கள் அமர்ந்திருந்தனர். மற்ற அனைவரும் ஆண்கள் தான். கீதா அந்தப் பெண்கள் இருந்த இருக்கை அருகில் சிறிது நேரம் நின்றாள். அதன்பின், அவர்களைப் பார்த்து, "ஏம்மா! நான் இங்கே தனியாக நிற்கிறேனே. நீங்களும் பொம்பளைங்க தானே! கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணி உட்காரக் கூடாதா?" என்று சிறிது சிடுசிடுவெனக் கேட்டாள்.

அங்கிருந்த ஒரு பெண் கனிவுடன், "கோபப்படாதேம்மா, இப்படி உட்கார். உன்னை நிற்க வைக்கிறதிலே எங்களுக்கென்ன சந்தோஷம்!" என்று சொல்லி, கீதாவையும் தங்களோடு உட்கார வைத்தாள். ஒரு மணி நேரப் பயணத்திற்குப் பின் பேருந்தில் இருந்து சிலர் இறங்கினார்கள். அவர்களில் ஒரு பெண்ணும் இறங்கினாள். வேறுசிலர் ஏறினார்கள். மீண்டும் அதே பிரச்சினை! இப்போது மூன்று பெண்கள் அமர்ந்திருந்த சீட்டிற்கு அருகில் ஒரு வயதான பெண் ஒரு கைக்குழந்தையோடு நின்று கொண்டிருந்தாள். அவள் கீதாவைப் பார்த்து, "அம்மா, குழந்தையோடு நிற்கிறேன். கொஞ்சம் உங்களோடு நானும் உட்கார்ந்து கொள்கிறேன்" என்று பணிவோடு கேட்டாள். உடனே கீதாவிற்குக் கோபம் வந்துவிட்டது. "பஸ்ஸில்தான் இடம் இல்லை என்று தெரியும் இல்லையா? பிறகு ஏன் ஏறவேண்டும்? இந்த சீட் மூன்று பேருக்குத்தான். பேசாமல் இறங்கி அடுத்த பஸ்ஸில் வாங்க. உங்களுக்கு கோடி புண்ணியம் தாயே! என்று எரிச்சலுடன் சொன்னாள்.

அதைக் கேட்ட மற்ற பயணிகளுக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன வார்த்தை பேசறே? நீ என்ன படிச்ச பிள்ளையா? இதைத்தான் உங்களுக்கு வாத்திமார் சொல்லித் தர்றாங்களா? நீ ஏறினப்போ மட்டும் உரிமையோடு இடம் கேட்டாய். இப்போது அந்த அம்மாவிற்குக் கொடுக்க முடியலையா? அந்த அம்மாவை உட்கார வை. இல்லாவிட்டால் நீ நிற்க வேண்டி வரும்" என்று அவர்களில் ஒருவர் உரக்கக் கூறினார். வேறு வழியின்றி வேண்டா வெறுப்புடன் கீதா அந்த அம்மாவுக்கு இடம் கொடுத்தாள்.

எனக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு ஒரு நீதி என்பது சமூக வாழ்விற்கு ஊறு விளைவிப்பது. நான் மட்டுமே நன்றாக, சுகமாக இருக்க வேண்டும் என்று நினைக்காமல் நானும் நலமாக வாழவேண்டும் பிறரும் நலமாக வாழவேண்டும் என்னும் மனப்பாங்குடன் வாழ்வது கூட்டு வாழ்வுக்கு இன்றியமையாத ஒன்று.

## புனிதர் மரிய வியான்னி



117 லியோன் நகரில் மெய்சியா என்று ஒருவர் இருந்தார். அவர் ஒரு கல்லூரியில் பேராசிரியர். இறை நம்பிக்கை அற்றவர். 'சுதந்திரச் சிந்தனை' என்ற கொள்கை உடையவர். 1841ல் அவருடைய நண்பர் ஒருவர் தாம் ஆர்சு செல்வதாகவும் அங்கே புதுமைகள் நடப்ப தாகவும் தெரிவித்தார். 'புதுமைகளா? மண்ணாங்கட்டி! அதையெல்லாம் நான் நம்புவதில்லை' என்றார். இருப்பினும் தன் நண்பருக்காக மெய்சியா ஆர்சு நகருக்கு வந்தார். வேடிக்கை பார்க்கும் நோக்குடன் மறுநாள் காலைத் திருப்பலிக்கும் சென்றார்.

118 திருப்பலி முடிந்ததும் தந்தை வியான்னி நேராக மெய்சியாவிடம் வந்து, தம்முடன் வரும்படி அழைத்தார். பாவ அறிக்கை செய்யச் சொன்னார். அதற்கு மெய்சியா "பாவ அறிக்கை செய்வதினால் ஒரு பயனும் இருப்பதாகத் தெரியவில்லை" என்று சலிப்புடன் கூறினார். எனினும் தந்தையின் கருணை மிகுந்த பார்வை அவர் உள்ளத்தைத் தூண்டியது. ஆனால் பாவ அறிக்கையில், அவர் சிறிது கூட மன வருத்தம் இல்லாமல் தமது வாழ்க்கையைப் பற்றிச் சொன்னார். அதைக் கண்டு உணர்ந்த தந்தை "நண்பரே நாளை வாரும், பேசலாம். இப்போது சென்று புனிதை பிலோமினாவிடம் மன்றாடும். அது உங்களுக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்" என்று சொல்லி அனுப்பினார்.



119 மிகுந்த துணிவுடன் மெய்சியா புனிதை பிலோமினா சுருபம் முன்னே சென்று நின்றார். என்ன ஆச்சரியம்! அவரது கண்கள் குளமாயின. அழுதவாறே தந்தையிடம் வந்து 'நான் இதுவரை எதையும் நம்பாமல் ஒரு மூடனாய் வாழ்ந்து வந்தேன். நீங்கள் தான் எனக்கு உதவ வேண்டும்' என்று மிகுந்த பணிவோடு வேண்டினார். தந்தை கிறிஸ்தவ விசுவாசம் பற்றிய கருத்துக்களை அவருக்கு விளக்கினார். இவ்வாறு மெய்சியா ஒன்பது நாள்கள் ஆர்சில் தங்கினார். மனந் திரும்பியது மட்டுமன்றி, மரணம் வரை கிறிஸ்தவ விசுவாசத்தில் பிரமாணிக்கமாய் வாழ்ந்தார்.



120 குறும்புக்காரியான செல்வி லூயிஸ் மார்ட்டின் ஒரு நாள் ஆர்சுக்கு வந்தாள். அவள் கன்னியர் சபையில் சேர விரும்பினாள். ஆனால் அவளுடைய பெற்றோர் அந்தப் பேச்சையே எடுக்கக் கூடாது என்றனர். பாவ அறிக்கைக்காக அவளது முறை வந்தபொழுது தந்தை வியான்னிக்குத் திருப்பலி நேரம் வந்துவிட்டது. இருப்பினும் அவளை பாவ அறிக்கை செய்ய அழைத்தார். அவள் அவரிடம், தன் மனதின் ஆழத்தில் இருந்த ஆவலை வெளிப்படுத்தினாள். "உனது இறை அழைத்தல் மேலிருந்து வருகிறது. ஒரு நாள் நீ துறவியாக இருப்பாய்" என்றார். அவளுக்கோ தாங்க முடியாத மகிழ்ச்சி. தந்தை சொன்னபடியே அவள் அருட் சகோதரியானாள்.



(தொடரும்)

RNI 1316 / 57 | 26th of every month | Pandianagar S.O. | REGD. TN/SR/DDL-225/2006-2008 Licensed to Post without Prepayment / TN/WPP - 62/SR/2006 - 2008

Edited & Published by Rev.Fr.M.S.Savariraj, S.J., and Printed at St.Mary's Press, Beschi College, P.B.No.90, Dindigul - 624 001, TamilNadu. ✆ (0451) 2432188



Courtesy: Desert Wisdom - Yushi Nomura

# சொல்லும் செயலும்

மனிதர்கள் மட்டும்தான் நடிக்கும் திறன் படைத்தவர்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேச நம்மால்தான் இயலும். நம் வாயால் எவ்வளவோ சொல்லி விடலாம். ஆனால் சொன்னவற்றை வாழ்வில் வாழ்ந்து காட்டுவதுதான் கடினம். 'இனிமேல் தினமும் ஒழுங்காகப் படிப்பேன்' என்று சொல்வது எளிது. ஆனால் அதைத் தினமும் நிறைவேற்றுவது கடினம்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்பது வள்ளுவர் வாக்கு. மற்றவர்களுக்குச் செயலால் கற்றுக் கொடுப்பவரே உண்மையான ஆசிரியர். எனவே யாரும் 'எனக்கு நாட்டியம் தெரியும்' எனச் சொல்லத் தேவையில்லை. நாட்டியம் ஆடினாலே அந்த உண்மை புலப்பட்டுவிடும். வெறும் பட்டத்தையும், மதிப்பெண்களையும் வைத்து ஒருவரின் அறிவை அளவிட முடியாது. ஒருவரின் செயலும் வாழ்வும்தான் அவரது அறிவுக்கு உண்மையான சான்றாக அமைகிறது.